REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 4உ திங்கள் (19—12—55) ★ ★ வெளியூர்: மார்கழி 5உ செவ்வாய் (20—12—55) [இதழ் 160

20 ஆண்டில் எல்லா கிராமங்களுக்கும் மின்சார வசதி

இந்தியாவில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் 20 ஆண்டுகளில் மின்சார வசதி ஏற்படுத்துவது பற்றி இந்தியப் பேரரசு நீண்ட காலத் திட்டம் ஒன்றைத் தயாரித்துக்கொண்டிருக்கிறது என்றும், இது இரண்டாவது திட்டக் காலத்திலிருந்து அமுலாகும் என்றும் தெரியவருகிறது.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் கிராமங்களுக்கும், சிறு நகரங்களுக்கும் மின்சார வசதி அளிப்பதற்காக மாநில அரசாங்கங்களுக்கு ரூ 20·5 கோடி கடனாகத் தரப்பட்டது என்றும், முதல் திட்ட இறுதியில் 6,500 கிராமங்களுக்கு மின்சார வசதி ஏற்படுமென்றும், சென்னைக்கு ரூ. 3 97 கோடி கடன் தரப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

'கற்பை இழக்க ஒரு பெண் ஒருப்படாள்'

'தன்மானத்தை இழக்க ஒருவர் இணங்கார்'

'சுதந்திரத்தை ஒரு நாடு இழக்க ஒப்பாது'

'அநீதியை அழிக்காமல் மராட்டியர் உயிர்வாழமாட்டார்கள்'

மக்கள் சபையில் காட்கில் இடி முழக்கம்

"பம்பாயைத் தனி மாநிலமாக அமைக்க வேண்டும் என்பது சில குறுகிய நோக்கம் கொண்ட முதலாளிகளின் நலன்களுக்காகக் கூறப்படும் கருத்தாகும்.

"மராட்டியர்கள் தங்களுக்கு அநீதி இழைக்கப்படுவதைப் பொறுத்துக்கொள்ளமாட்டார்கள் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

"பம்பாயைத் தலைநகராகக் கொண்ட சம்யுக்த மராட்டியம் அமையக்கூடாது என்பதற்காக, மாநிலப் புது அமைப்புக் குழுவினர் தந்துள்ள வாதங்கள் மராட்டியரைப் புண்படுத்துவதாகும்.

"மராட்டியரல்லாதாருக்கு எவ்வளவு பாதுகாப்புகள் வேண்டும் என்று நினைக்கிறார்களோ, அவ்வளவு பாதுகாப்புத் தரச் சித்தமாயிருக்கிறோம். ஆனால், பம்பாயை விட்டுக்கொடுப்பது என்பது இல்லை;

"பண்டித பந்த் அவர்கள் இந்தியாவின் ஒற்றுமை பற்றிக் குறிப்பிட்டார்கள்; அது எனக்கு உடன்பாடானதே. எஸ். கே. படீல் அவர்கள், 'விட்டுக்கொடுத்தலும், ஒத்துழைப்பும் வேண்டும்' என்றார்; இவையும் எனக்கு உடன்பாடானதே.

"ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பரிகாரம் காணுவதற்காக, நான் ஒரு காந்தியாரின் சீடன் என்ற முறையில் எவ்வளவு அதிகபட்சமாக விட்டுக்கொடுக்க முடியுமோ, அவ்வளவும் விட்டுக்கொடுக்கத் தயார்; ஆனால், எதற்கும் ஒரு எல்லை இருக்கிறது.

"ஒருவர் தனது தன்மானத்தை விட்டுக்கொடுக்க இயலாது. பெண் ஒருத்தி தனது கற்பை விட்டுக்கொடுக்க முடியாது. ஒரு நாடு தனது சுதந்திரத்தை விட்டுக்கொடுக்க முடியாது,"

—என்று, மக்கள் சபையில் சம்யுக்த மராட்டிய மாநில அமைப்பை ஆதரித்துப் பேசிய என் வி காட்கில் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"மாநிலங்களைத்திருத்தி அமைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களைப் பற்றி நான் எதுவும் சொல்ல விரும்பவில்லை. அவர்கள் எல்லாம் நல்லோரே; ஆனால், நல்ல நோக்கத்தோடு அவர்கள் செய்த சிபாரிசுகள் உ. பி. - யைத் தவிர இதர எல்லா இடங்களிலும் சிக்கல்களைக் கிளப்பிவிட்டிருக்கிறது. குழுக்கள் வருகின்றன—போகின்றன; ஆனால், உத்திரப் பிரதேசம் அப்படியேதானிருக்கின்றது (பெருத்த கைதட்டல்); நான் இதற்காகப் பொறாமைப்படவில்லை—மாறாகப் போற்றுகிறேன்.

"பம்பாய் நகரைப் பொறுத்த மட்டில், குழுவினர், 'பம்பாய் பூகோள ரீதியாக மராட்டியத்தைச் சேர்ந்தது' என்று கண்டிருக்கிறார்கள்; ஆனால், பம்பாய் 'மராட்டியரைத்தான் சேரவேண்டும்' என்று கூற அவர்களுக்குத் துணிவு இருக்கவில்லை.

"இப்போது சிக்கலுக்குள்ள ஒரே பரிகாரம் எல்லா மராட்டியர்களையும் ஒன்று திரட்டி, பம்பாயைத் தலைநகராகக் கொண்ட ஒரே மாநிலத்தில் வாழச் செய்வதுதான்

"குழுவினர் சிபாரிசு செய்திருக்கிற 'சமநிலைக் கொள்கை' என்பது, நடைமுறைக்கு இலாயக்கானதல்ல. அதன் முதல் விளைவு, வட்டாரத்தில் வகுப்புவாதம் பரவும்.

"மிகக் கசப்பான அளவுக்கு வகுப்புவாதம் வளரும்; அப்போது, பம்பாயில் உள்ள குஜராத்திகள்—பெரும்பாலும் வர்த்தகர்களும், பணக்காரர்களுமாவர் — அவர்கள் நிலை என்னவது? எங்களிடத்தில்—மராட்டியரிடத்தில் ஏழ்மையைத் தவிர எதுமில்லை, இழப்பதற்கு; குறிப்பிடத்தகுந்த அளவு பணக்காரர்களாயுள்ள ஒரு சமூகத்திற்கும், ஏழைகளான எங்களுக்குமிடையே எத்தகு மனோநிலை,

(4-ம் பக்கம் பார்க்க)

கல்வி கற்றோரிடை நிலவும் வேலையில்லாத் திண்டாட்டம்

குறைப்பதற்கு ரூ. 90 இலட்சம் செலவில் திட்டம்?

ஆமதாபாத், டிச. 17—

நாட்டில் கல்வி கற்றோரிடையே வேலையில்லாத் திண்டாட்டம் பெரும் அளவில் நிலவுகிறது என்பது தெரிந்த ஒன்றல்லவா?

இவ்வேலையில்லாத் திண்டாட்டத்தைக் குறைப்பதற்காக ரூ. 90 இலட்சம் செலவில் ஒரு திட்டத்தை அ. இ பாரத் சேவா சமாஜம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அமுல் நடத்தப் போவதாகத் தெரிகிறது.

15,000-க்கு மேற்பட்ட படித்த வேலையற்றோருக்கு, பல்வேறு கைத்தொழில்களில் பயிற்சியளிப்பதற்கு திட்ட காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

இந்த நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு நாடெங்கும் 25 பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படும்; பயிற்சிக் காலம் 6 மாதமாக இருக்குமாம்.

'ஐ.நா.-வில் சீனாவிற்கு இடம் தராதது ஐ.நா. பலத்தைக் குறைத்துள்ளது'

பண்டித நேருவின் கருத்து

புதுடில்லி, டிச. 18—

ஐக்கிய நாடுகள் சபையில் சீனாவைச் சேர்த்துக் கொள்ளாதிருப்பது பெரியதொரு தவறாகும்; இந்தத் தவறினால் சீனாவிற்குத் தீங்கேதும் ஏற்பட்டு விடவில்லை; மாறாக, ஐ. நா. சபையைத்தான் பலவீனப்படுத்தி யிருக்கிறது; அதன் அதிகாரத்தைக் குறைத்திருக்கிறது.

"உலகின் மூன்றில் ஒரு பங்கு மக்கள் வாழும் செஞ்சீனா, ஐ. நா.-விற்குள் நுழைய முடியாதுசெய்ய சில வல்லரசுகள் மேற்கொண்டுள்ள முயற்சிகள், இந்தியாவையும், வேறு பல சுதந்திரநாடுகளையும் பாதிக்கிறது.

"ஆசியாவில் முளைத்துள்ள பல சிக்கல்கள், சீனா ஐ. நா.-வில் இடம் பெற்றிருந்தால் தோன்றியிருக்க நியாயமில்லை. இப்போது சீனா அனுமதிக்கப்பட்டால், அவை எல்லாம் தீர்க்கப்பட முடியும் என்றே நான் நம்புகிறேன்."

என்று, பண்டித நேரு, திருமதி சன்யாட்-சென்னுக்குத் தரப்பட்ட வரவேற்பு ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

67,19,004 பேருக்கு பி. சி. ஜி. ஊசிகுத்தப்பட்டதாம்!

இந்த ஆண்டு ஜனவரியிலிருந்து அக்டோபர் 31-ந் தேதிவரையில் நாட்டில் மொத்தம் 67,19,004 பேருக்கு பி சி. ஜி ஊசி குத்தப்பட்டிருக்கிறதாம்.

மாநிலக் குழுவின் மீது முன்னாள் மன்னர் பாய்ச்சல்

வழி முறை தவறி சிபாரிசு செய்ததாகப் புகார்

ஆமதாபாத், டிச. 17—

"'இராஜப் பிரமுகர்'கள் பதவி குறித்து மாநிலக் குழுவினர் கருத்தறிவித்திருப்பது, வழிமுறை தவறியதாகும். மாநிலங்களைத் திருத்தி அமைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவினர், 'இராஜப் பிரமுகர்'களின் பதவி குறித்து அறிவித்த கருத்துக் கண்டு நாங்கள் ஆச்சரியமடைந்தோம். இது குறித்துக் கருத்தறிவிக்க, அவர்கள் கேட்கப்படவில்லை. அப்படியிருக்க, ஏனோ மாநிலக் குழுவினர் இப்படி ஒரு வழியைப் பின்பற்றியிருக்கின்றனர்,"

—என்று, சௌராஷ்டிர இராஜப் பிரமுகரான நவநகரின் முன்னாள் மன்னர் குறிப்பிட்டிருக்கிறார்.

மேலும் அவர் குறிப்பிட்டதாவது :—

"இராஜப் பிரமுகர் பதவி ஒழிப்பு நாட்டு நலனுக்கு உகந்ததானால், நான் அந்த சிபாரிசை வரவேற்கத் தயார்.

"'இராஜப் பிரமுகர்'களும், முன்னாள் மன்னர்களும் இதரரைப் போன்றே நாட்டுப்பற்றுக்கொண்டவர்கள்தான் நாட்டிற்காக, இனியும் அவர்கள் தியாகங்கள் புரியச் சித்தமாயிருக்கின்றனர். நான் என்னைப் பொறுத்தமட்டில் பதவியிலிருந்து விலகிக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்.

"'இராஜப் பிரமுகர்'கள் நியமிக்கப்படும்போது, ஆயுள் காலம் வரை பதவி தரப்படும் என்று கூறப்பட்டது. இப்போது பதவி பறிக்கப்படும் என்று கூறினால் அதற்காக நான் கவலைப்படமாட்டேன்."

தங்கள் வருமானத்தைக் குறைத்துக் கொள்ளவேண்டும் என்ற பண்டித நேருவின் வேண்டுகோளுக்குத் தங்களாலான வரையில் செவி சாய்த்து வருவதாயும் தேவையான அளவு 'தியாகம் புரிய'த் தயாராயிருப்பதாயும், அவர் தெரிவித்தார்.

புதுடில்லி இரயில்வே நிலையத்தின் கட்டுமான வேலைகள் முழுவதும் 1956 ஆரம்ப வாக்கில் பூர்த்தியாகிவிடுமாம்; 1955 செப்டம்பர் வரையில் அதற்கு மொத்தம் ரூ 11 69,304 செலவாகியிருக்கிறதாம்.

மாநில மொழிகளை ஆட்சி மொழிகளாக்கக்கூடாதாம்

காலமும் ஆற்றலும் வீணாகுமாம்

இந்தியை அன்னிய மொழியாகக்கருதும் நிலை வருமாம்

"இந்தி இந்தியாவின் ஆட்சி மொழியாக விளங்கவேண்டுமானால், கூடுமானவரை மாநிலங்கள் முழுவதிலும், இந்தியே அரசாங்க அலுவல்களுக்கு உபயோகிக்கப்பட வேண்டும்.

"ஒவ்வொரு மாநிலமும், அதனுடைய வட்டார மொழியை அரசாங்க அலுவல்களுக்கு உபயோகிக்க அனுமதிக்கப்பட்டால் படிப்படியாக, இந்தி அன்னிய மொழி என்று மாநிலத்தவரால் கருதப்படும் நிலை வளரும்; இறுதியில், இந்தியை தேசிய மொழியாக்கும் நோக்கம் தோல்வியடையும்.

"மேலும், வட்டார மொழிகளில் சரியான சொற்களைக் கண்டுபிடிப்பதற்காகச் செலவழிக்கப்படும் காலமும், சக்தியும் விரயமாகும்; அது, கொள்கைக்கும் நடைமுறைக்கும் மாறானது

"அரசாங்க மொழி ஆக்கப்பட வேண்டும் என்றால், இந்தியின் அபிவிருத்தியில் மட்டுமே காலத்தையும், சக்தியையும் செலவிட வேண்டும்."

—என்று, இந்தியத் தொழில் வர்த்தக சம்மேளனம், ஆட்சி மொழிக் குழுவினரின் வினாத் தாளுக்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

சென்னைக்கு ரூ. 20 லட்சம் கடன் தருவராம்!

சென்னை உயர் நீதிமன்றத்திற்குப் பக்கத்திலுள்ள 'இரயில்வே கேட்'டிற்குப் பதிலாக ஒரு மேம்பாலம் அமைப்பதற்கான சென்னை சர்க்காரின் திட்டத்திற்கு ரூ. 20 இலட்சம் கடன் தருவதற்கு இந்திய சர்க்கார் அனுமதித்துவிட்டதாம். அப்பாலம் அமைப்பதற்கு ரூ 30 இலட்சமும், சுற்றுப்பக்கச் சாலைகள் அமைக்க ரூ. 20 இலட்சமும் ஆக ரூ. 50 இலட்சம் செலவாகுமென மதிப்பிட்டிருக்கிறதாம்.

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 19—12—'55 திங்கள்

ஐ. நா.-வில் புதிய உறுப்பினர்கள்

ஐக்கிய நாடுகள் சபையில் புதிதாகப் பதினறு நாடுகள் இடம் பெற்றிருப்பது உண்மையில் மகிழ்ச்சிக்குரியதே யாகும்.

ஐக்கிய நாடுகள் சபையில் உலகில் உள்ள அத்தனை சுதந்திர ஆதிபத்திய உரிமை கொண்ட நாடுகளும் இடம் பெறும்போதுதான், அது உலக மக்களின் அனைவருடையவும் எண்ணங்களைப் பிரதிபலிக்கும் ஒரு பொது நிறுவனம் என்ற நிலை மலர முடியும்; அப்போதுதான் உலக மக்களின் எந்த ஒரு சிறு பகுயினுடையவும் :சுதந்திரம், நீதி, பாதுகாப்பு, உரிமைகள் முதலியன பாதுகாக்கப்பட முடியும் என்பதால், ஐ. நா. சபையில் எல்லா நாடுகளும் இடம் பெற வாய்ப்பு ஏற்படவேண்டும் என்று நாம், சபையின் பத்தாவது ஆண்டு விழா அண்மையில் நடைபெற்றபோது எடுத்துக் காட்டியிருந்தோம்.

இப்போது இடம் கோரி மனுச் செய்திருந்த பதினெட்டு நாடுகளில் பதினறு நாடுகள் புதிதாக ஐ. நா. சபையில் அனுமதிக்கப்பட்டிருப்பது, பொதுவாக எல்லாத்தரப்புக் கருத்தினராலும் வரவேற்கப்படுகிற ஒன்ருகும்.

'மனுச் செய்திருந்த பதினெட்டு நாடுகளும் இடம்பெற அனுமதிக்க வேண்டும்' என்று, ஐ. நா. பொதுச் சபையில், கனடா நாட்டுப் பிரதிநிதி திர்மானம் கொண்டுவந்தார்.

ஆனல், பாதுகாப்புச் சபைதான் இதில் இறுதியான முடிவுகளும் அதிகாரமுடையது; சீன நாட்டை ஆண்டுக் கொண்டிருந்து, சீனமக்களால் அடித்துத் துரத்தப்பட்டு பார்மோசாத் தீவில் அமெரிக்காவின் பாதுகாப்புடன் வாழ்ந்து வரும் சியாங்-கே-ஷேக்கின் பிரதிநிதிக்குப் பாதுகாப்புச் சபையில் இன்னும் இடம் தரப்பட்டிருக்கும் கொடுமையினல்—அநீதியினல், அந்தப் பிரதிநிதி, பதினெட்டு நாடுகளில் ஒன்ருன வெளி மங்கோலியாவிற்கு இடம் தரக்கூடாது என்றும், இடம் தருவதானல், தனக்குள்ள 'ரத்து' அதிகாரத்தைப் பிரயோகித்து எந்த ஒரு நாடும் புதிதாக ஐ. நா.-வில் இடம்பெருது செய்துவிடுவதாக மிரட்டி, அதுபோலவே 'ரத்து' அதிகாரத்தையும் பிரயோகித்தது. இந்நிலை ஏற்பட்டது கண்டு ஐ. நா.-வில் உள்ள நல்லெண்ணங் கொண்டோர் அனைவரும் வருந்தினர்.

பின்னர், ரஷ்யா, புதியதொரு முயற்சியை மேற்கொண்டது. அதன்படி, வெளி மங்கோலியா, ஜப்பான் ஆகிய இரு நாடுகளையும் நீக்கிவிட்டு, இதர பதினறு நாடுகளையும் அனுமதிப்பது என்ற முடிவு மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆசிய நாடுகள் என்ற முறையில் ஜப்பானும், வெளி மங்கோலியாவும் உடன் இடம் பெற முடியாது போய்விட்டது வருந்தற்குரியதுதான் என்ருலும், அவை இரண்டும், வளர்ந்துவருகிற முற்போக்குச் சூழ்நிலைகளில், என்றென்றைக்கும் இடம் பெறவே முடியாது என்பதல்ல.

புதிதாக இடம் பெற்றிருக்கும் நாடுகளில் சில, அண்மையில்தான் ஏகாதிபத்தியப் பிடிப்பினின்றும் விடுதலைபெற்றவை. தங்களுடைய நாடுகள் அடிமைப்பட்டிருந்தபோது தாங்கள் அனுபவித்த சுரண்டல் கொடுமை, அடக்குமுறைத் தாண்டவம், மானமிழந்து தவிக்கும் அவலம், இவற்றையெல்லாம் ஒருகணம் எண்ணிஞல், உலகில் இன்னும் விடுதலை இழந்து தவிக்கும் மக்களின் நிலையை உணர முடியும். புதிதாக விடுதலை பெற்ற நாடுகள் எல்லாம், ஏதேனும் ஒரு 'கோஷ்டி'யுடன் சேர்ந்து 'கோரஸ்' பாட முற்பட நினைக்காது, தங்கள் திறனுக்கேற்பத் தெளிந்த சிந்தனையுடன்-உள்ள உறுதியுடன்—நேர்மை நெஞ்சத்துடன் செயலாற்ற முனைவார்களேயானல், உலகின் பல பாகங்களிலும் இன்னும் அடிமைப்பட்டுக்கிடக்கும் மக்கள் விடுதலை பெற வழிவகைகள் காண முடியும்.

மற்றவரது 'நிழல் இருளி'ல் நிற்கும்போதுதான் ஒளிவிட்டுப் பிரகாசிக்க முடியும் என்றெண்ணுமல், தங்களது சுதந்திரத்தை அடகு வைத்துவிடாமல், கூடிய வரையில் நீதிக்காகப் போராடுவதுதான், ஐ. நா. நிறுவனம் மேலும் பொலிவும், வலிவும் பெற்று விளங்க உதவுவதாக இருக்கும். இடம் பெற்றுவிட்டால் மட்டும் போதுமானதல்ல; பெற்ற இடத்தின் பெருமையையும், கடமையையும் உணர்ந்து செயல்படுவதே வேண்டற்பாலது.

வாக்காளர் பட்டியல்

பழைய காகிதமாக விற்கப்பட்டதாம்

எர்ணுகுளம், டிச 16—

சேர்த்தலை வட்டம் முழுவதற்குமான வாக்காளர் பட்டியல் முழுவதும் காணமற் போய்விட்டதாகத் தெரிய வருகிறது.

இந்தப் பட்டியல் சுமார் ஒரு டன் எடை இருக்கும் என்றும் இதனைப் பல தவணைகளில் ஒரு வேலையாள், பழைய காகிதம் வாங்குவோரிடம் விற்றுவிட்டதாயும் கூறப்படுகிறது

காப்பி: நரம்புகளுக்குக் கிளர்ச்சியூட்டுமாம்!

மத்திய சுகாதார அமைச்சர் மக்கள் சபையில் கூறுகிறர்

புதுடில்லி, டிச 15—

"காப்பி, சிக்கரி ஆகிய இரண்டிலும் நமது வயிற்றுக்கு இதத்தைத் தரக்கூடிய—எளிதில் ஆவியாகும் தன்மைவாய்ந்த எண்ணெய்ச் சத்துக்கள் அடங்கியிருக்கின்றன: ஆனல், காப்பியில் (ஆல்-லாய்ட்) காரச் சத்துள்ள காபின் என்ற மற்ருெரு பொருளும் சேர்ந்திருக்கிறது; இப்பொருளுக்கு நமது உடலின் நரம்புத் திரள்களுக்குக் கிளர்ச்சி ஊட்டக்கூடிய குணம் இருக்கிறது. எனினும், காப்பி, அல்லது சிக்கரி ஆகிய எதையும் அளவுக்கு மிஞ்சி உட்கொள்வது நல்லதல்ல"

என்று, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் மத்திய சுகாதார அமைச்சர் ராஜகுமாரி அமிர்த கௌரி எழுத்து மூலம் கூறியுள்ளார்.

மக்கள் சபை—கேள்வி நேரம்:

நெய்வேலி நிலக்கரிப் படிவங்கள் தோண்டி எடுக்கவே முடியாதனவா?

பரிசோதனையிலேயே காலங்கடத்தவா?

இந்திய சர்க்காரின் நோக்கம்தான் என்ன?

"நெய்வேலியில் பழுப்பு நிலக்கரிப் படிவங்களை வெட்டி எடுப்பதற்கான வேலையில் உதவிபுரிய இந்திய சர்க்கார் கிழக்கு ஜெர்மனியிலிருந்து நிபுணர்களை அழைக்கவில்லை,"

என்று, மக்கள் சபையில் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் உற்பத்தி மந்திரி கூறினர்.

"இப்படிவங்கள் சம்பந்தப்பட்ட மட்டில், இத்திட்டத்தைப் பற்றிப் பரிசீலனைகள் நடத்தி, திட்ட வேலை அறிக்கையைச் சமர்ப்பிக்கும் பொறுப்பு பிரிட்டிஷ் நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது; இந்த நிறுவனத்தின் சிபாரிசுகளையொட்டி, சில பூர்வாங்கப் பரிசீலனைகளை சர்க்கார் நடத்திவருகின்றனர்; தக்க முன்னேற்றம் அடைந்துவிட்டபடியால் இவற்றை நடத்துவதற்காகப் புதிதாகத் தொழில் நுட்ப ஆலோசகர்களை நியமிக்கும் கேள்வியே எழவில்லை," என்றும் அவர் கூறினர்

"கிழக்கு ஜெர்மனியிலிருந்து வந்திருக்கும் வாததகத் அதுக்

குழுவினர் நெய்வேலிப் பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் அமைக்கவும், அதன் மூலம் மின்சாரம் உரவகைகள் உற்பத்தி செய்யவும், இதன் உதவியால் சிறிய உலைகளின் மூலம் உருக்கு உற்பத்தி செய்யவும், தொழில் நுட்ப ரீதியில் கூட்டாக ஒத்துழைக்கத் தயாரென வும் நமக்குத் தெரிவித்தனர். திட்டத்தின் தற்போதைய நிலை, இப்பொழுதுள்ள ஏற்பாடுகள் பற்றி அவர்களுக்கு விளக்கி வைக்கப்பட்டது. தொழில் நுட்பக் கூட்டாக ஒத்துழைப்பது பற்றிய விவரங்களை அவர்கள் தெரிவிக்கவும் இல்லை; அவைகள் பற்றி அவர்களிடம் விவாதிக்கப்படவும் இல்லை," என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்

"ஆனல், கிழக்கு ஜெர்மானிய நிபுணர்கள் விரும்பினல் இதுவரை சேகரிக்கப்பட்டுள்ள தகவல்கள் பற்றி அவர்கள் பூர்வாங்கப் பரிசீலனை நடத்தலாம் என்றும், இப்படிவங்களை வெட்டியெடுப்பது சம்பந்தமான பிரச்சினைகளைப் பற்றி ஆராயலாம் என்றும், அப்படி அவர்கள் செய்வது வரவேற்கப்படுமென்றும் அவர்களுக்குச் சொல்லப்பட்டிருக்கிறது," என்றும் அவர் விளக்கினர்.

உபகாரச் சம்பளங்கள்

நடப்பு நிதி ஆண்டில், பட்டப் பிற்காலப் படிப்புகளுக்கான இந்திய சர்க்காரின் உபகாரச் சம்பளங்கள் கோரி, தாழ்த்தப்பட்ட வகுப்புகள், தாழ்த்தப்பட்ட குடிகள், இதர பின்தங்கிய வகுப்புகள் ஆகியவற்றைச் சேர்ந்தவர்களிடமிருந்து மொத்தம் 2,086 கோரிக்கைகள் வந்தனவாம்; இவைகளில் 1,298 கோரிக்கைகள் தேர்ந்தெடுக்கப்பட்டனவாம்.

'தசாம்ச முறை': அமுலுக்கு கொண்டுவர மசோதா

இந்தியா முழுவதிலும் எடைகளையும், அளவைகளையும் தசாம்ச முறையில் ஏற்படுத்துவதற்கான மசோதா ஒன்று அடுத்த ஆண்டு ஆரம்பத்தில மக்கள் சபையில் சமர்ப்பிப்பதற்குத் தயாராகிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்; ஒரே ரீதியான எடைகளையும், அளவைகளையும் அமுலுக்குக்கொண்டு வருவது பற்றி இறுதி முடிவு செய்யப்பட்டுவிட்டதாம்.

பாக்தாத் ஒப்பந்தம்: பிரிட்டன் சேர்ந்ததற்கு இந்தியா வருத்தம்

பாக்தாத் இராணுவக் கூட்டு ஒப்பந்தத்தில் பிரிட்டன் சேர்ந்திருப்பதற்கு, இந்திய சர்க்கார் தனது வருத்தத்தைப் பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தெரிவித்திருக்கிறதாம் இச் செய்கையால், நன்மைகள் ஏற்பட முடியாதென்றும் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளதாம்.

மரவள்ளிக் கிழங்கினுல் மனதுக்கு தெம்பில்லை?

'நஞ்சுப் பகுதி'யும் இருக்கிறதா?

சுகாதார அமைச்சர் சுட்டிக்காட்டும் காரணங்கள்

புதுடில்லி, டிச. 15—

"மரவள்ளிக் கிழங்கிலுள்ள வலுவூட்டும் சத்து பற்றி ஆராய்ச்சிகள் ஏதேனும் மேற்கொள்ளப் பட்டிருக்கிறதா?"

என்ற கேள்விக்கு மக்கள் சபையில், மத்திய சுகாதார அமைச்சர் 'ஆம்' என்று கூறிவிட்டு, மரவள்ளிக்கிழங்கின் சத்து பற்றி இந்தியாவிலும், வெளி நாடுகளிலும் ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டிருக்கின்றன என்றும் தெரிவித்தார் 'வலுவூட்டும் சத்தைப் பொறுத்த வரையில் மரவள்ளிக்கிழங்கு மிகவும் பூரணத்துவம் இல்லாத ஒரு உணவாகும். இதில் சுமார் 0·5 சதவிகிதம் புரட்டீனும், பாக்கிப் பெரும்பாலும் மாவுச் சத்தும்தான் அடங்கியிருக்கின்றன; ஆகவே, முழுவதும் மரவள்ளிக்கிழங்கே அடங்கிய ஆகாரத்தையே நீண்டகாலம் சாப்பிட்டுவந்தால் உடலுக்குத் தெம்பிருக்காது. இதை மற்றவகை ஆகாரங்களுடன் சேர்த்தே சாப்பிட வேண்டும்; குறிப்பாக புரட்டீன் சத்து நிரம்பிய பொருள்களுடன் சேர்த்துச் சாப்பிட்டால்தான், மரவள்ளிக் கிழங்கின் புரட்டீன் பற்ருக் குறையைச் சரிக்கட்ட முடியும். மரவள்ளிக்கிழங்கின் மாவை, பல அம்சங்களிலும் தானியங்கள், கிழங்கு வகைகள் போன்ற இதர பொருள்களிலிருந்து கிடைக்கக்கூடிய மாவுச் சத்துக்களுக்குச் சமமானதாகக் கருதலாம். மரவள்ளிக்கிழங்கில் புரட்டீன் சத்து குறைவாக இருப்பதோடு மட்டுமின்றி, அதில் நஞ்சுப்பகுதியுள்ள 'குளுக்கோசைட்' என்னும் பொருளும் அடங்கியிருக்கிறது. ஆனல், அதைச் சரியான முறைகளில் பக்குவம் செய்வதன் மூலம் இந்த விஷச் சத்தை அகற்றிவிட முடியும்"

என்றெல்லாம்கூட அவர் கூறியிருக்கிறர்.

மாநிலங்கள் சபையில் கேள்வி நேரம்

★

40 ஆண்டுகளுக்கு மேலாக உழைததுவரும் எஞ்சின்கள்

இந்திய இரயில்வேக்களில் 40 ஆண்டுக்கு மேலாக உழைத்து வரும் எஞ்சின்கள், 1955 மார்ச் 31-ந் தேதியன்று 2,719 என்று அறிவிக்கப்பட்டது

மின்சார வசதியற்ற தென் பகுதி ரயில்வே நிலையங்கள்

தென் பகுதி இரயில்வேயில் 23 நிலையங்களில் மின்சார வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றனவாம்; 941 நிலயங்களில் மின்சார வசதி இலலையாம்!

மலிவான விலையில் சத்துள்ள உணவு

மைசூரிலுள்ள மத்திய உணவுத் தொழில நுட்ப ஆராய்ச்சி நிலயததினா 'குறைந்த விலை புரொட்டீன் உணவு' என்ற பெயரில் மலிவானதும், சத்து மிகுந்ததுமான ஒரு உணவுப் பண்டத்தைத் தயாரிக்க வழி கண்டுபிடித்திருக்கிறர்களாம். எண்ணெய் நீக்கிப் பதப்படுத்தப்பட்ட வேர்க்கடலை மாவு, வறுக்கப்பட்ட பயிறுகள் மூலம் தயாரிக்கப்பட்ட இந்த உணவில் அத்தியாவசியமான தாதுப் பொருள்களும், சத்துக்களும் நிறைய இருக்கின்றனவாம்.

இருதார மணம்: மத்திய சர்க்கார் அதிகாரிகள் மனு

1954 அக்டோபர் 16-ந் தேதிக்குப் பின்னர் இருதார மணம் செய்துகொள்ளுவதற்கு மத்திய சர்க்கார் அதிகாரிகள் 11 பேர் அனுமதி கோரினராம். இதே கால வரையறைக்குள் இவ்வித அனுமதி இருவருக்குததான் வழங்கப்பட்டதாம்.

பலன் பெற்றவர்கள் எவரோ?

சங்கீத நாடக அகாடமி, நடைமுதல் நிதி ஆண்டில், நவம்பர் 15-ந் தேதியுடன் முடிவடைந்த கால அளவில் ரூ. 1,14,431—4—6 செலவிட்டிருக்கிறதாம்.

கிராமிய நடனக் குழுக்களில் சிறந்தவைகளுக்குப் பரிசுகள் வழங்குவது, தேசிய நடன விழாக்களை நடத்துவது, பிரபல சங்கீத வித்துவான்களைப் பாடச் செய்து இசைத் தட்டுகளில் பதிவு செய்வது, இந்திய சங்கீத நூல்களைச் சேகரிப்பது, கையெழுத்துப் பிரதிகள் அட்டவணையைத் தயாரிப்பது, கலைஞர்கள், நாடகாசிரியர்கள் முதலியவர்களுக்கு ஊக்கமளிக்கும் திட்டங்களுக்கு மாநில சர்க்கார்கள் மூலம் ஏற்பாடு செய்வது, திரைப்பட விழாக்களை நடத்துவது முதலிய நடவடிக்கைகளில் அந்த அகாடமி ஈடுபட்டிருக்கிறது.

ரூ. 29 இலட்சம் செலவில் புதுவைக்குக் கப்பல் துறை

புதுவையில் ரூ. 29 இலட்சம் செலவில், புதியதோர் கப்பல் துறை கட்டுவதற்கான திட்டம் இந்திய சர்க்காரிடமும் இருக்கிறதாம்; 'சர்வே', 'மாதிரி'கள் தயாரிப்பது ஆரம்பமாகிவிட்டதாம்.

பத்திரம் பதிவு செய்ய சாதிப்பெயர்தேவையில்லை

புதுடில்லி, டிச. 16—

பத்திரங்களைப் பதிவு செய்கையில் தொடர்புடைய நபர்களின் சாதிப் பெயரை குறிப்பிடாமலிருப்பதற்கான தனிப்பட்ட உறுப்பினர் ஒருவரின் மசோதா, மக்கள் சபையில் பெரும் ஆரவாரத்திற்கிடையே நிறைவேறியிருக்கிறது

இந்த மசோதாவைக் கொண்டுவந்த எஸ். ஜி. சமந்தா, 'மதச் சார்பற்ற இந்தியாவில் சாதிப் பெயர்களை உபயோகிப்பது பொருத்தமற்ற செயல்' என்று குறிப்பிட்டார்,

சட்டத் துறை அமைச்சரான எச். வி. படாஸ்கர், சில சிறு மாறுதல்களுடன் மசோதாவை ஏற்றுக் கொண்டு, இதுவரை சாதியின் பெயரைச் சொல்லாத காரணத்திற்காக ஒரு அதிகாரி பத்திரத்தைப் பதிவு செய்ய மறுக்கமுடியும் எனறும். இனி சாதியின் பெயரைச் சொல்லத் தேவை இல்லை என்றும், சட்டத்தில் உள்ள ஒரு முரண்பாட்டினை நீக்க தனிப்பட்ட ஒரு உறுப்பினர் முன்வந்தது பற்றி தான் மகிழ்வதாயும் தெரிவித்திருக்கிறர்.

கழகச் செய்திகள்

கோவை மாவட்ட தி. மு. கழகம்

மாவட்டக் குழுக் கூட்டம்

11—12—55, மாலை 4 மணியளவில், ஈரோட்டில் கோவை மாவட்ட தி மு. கழக மாவட்டக் குழுக் கூட்டம், கழகக் கட்டிடத்தில் மாவட்ட துணைச் செயலாளர் வி. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்றது. தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் என். வி நடராசன் அவர்களும் கலந்து கொண்டார். மாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து 40 உறுப்பினர்கள் பங்கு கொண்டனர்.

தோழர் வி. சண்முகநாதன், மாநில மாநாட்டு நிதி பற்றியும், உறுப்பினர் சேர்க்கும் முறை குறித்தும், பொங்கல் வாரத்தில் அண்ணா, நெடுஞ்செழியன் இவர்கள் சுற்றுப்பயணம் குறித்தும் பேசினார்

வெள்ளக்கோவில் சி. முத்துச்சாமி அவர்கள் பொதுக் குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

கொத்தமங்கலம் தி. மு. கழகம்

12—12—55 இரவு 8 மணிக்கு கழக நிர்வாகக் குழுக் கூட்டம் தோழர் ஏ. பி. இராசன் இல்லத்தில் எம். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றபோது, நிதி வசூல் செய்து விரைவில் கழகக் கட்டிடம் கட்டுவதெனவும், தேவிகுளம், பீர்மேடு பகுதிகளை சென்னை மாநிலத்துடன் இணைத்துத் ‘தமிழ் நாடு’ எனப் பெயரிடுமாறு அரசியலாரைக் கேட்டுக்கொண்டும், தஞ்சை, திருச்சி, இராமநாதபுரம், மதுரை ஆகிய மாவட்டப் பகுதிகளில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், தோழர் ஏ. பி. இராசன் தலைமையில், தோழர்கள் எ. டி. பதி, பி டி சாமி, எம். ஏ. சுந்தரம், எம். ஏ. எஸ். துரை ஆகியவர்களைக் கட்டிட நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுத்தும், பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாதுங்கா-பம்பாய் தி. மு. கழகம்

13—12—55 மாலை 6 மணிக்கு, தோழர் ஜே எஸ். இலாசரஸ் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் தோழர் கே. இதயன் புதிய செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

பின்னர், தோழர் இ. எஸ். எஸ். பிச்சையா, ஜோதிநாயகம், யோ. தர்மராசன், தொ. து. அன்புச்செழியன், இலாசரஸ், பாண்டியன், நாராயணன், என். பெருமாள் ஆகியோர் தென்னாட்டின் புயல் நிலை பற்றிப் பேசினர். தோழர் என். பெருமாள் தலைமையில் நிவாரண நிதிக் குழு ஒன்று அமைக்கப்பட்டது; பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

நரசிங்கபுரம் தி. மு. கழகம்

10—12—55 இரவு 8 மணிக்கு, கழகப் பணிமனையில் செயலாளர் என். என். பெரியசாமி தலைமையில் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, பொங்கல் விழாவில் ‘தூக்குமேடை’ நாடகம் நடத்துவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

சூலூர் தி. மு. கழகம்

15—12—55 காலை கழக நிர்வாகக் குழுக் கூட்டம் செயலாளர் தலைமையில் நடைபெற்றபோது, புயல் நிவாரண நிதி ஒன்று திரட்டி அனுப்பிவைப்பதென்றும், மற்றும் சில முடிவுகளும் செய்யப்பட்டது.

புதுவை—அரியநகர் தி. மு. கழகம்

10—12—55 மாலை 7 மணியளவில் கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் தோழர் வ. பாவாடைராஜ் தலைமையில் நடைபெற்றபோது, அண்ணா, பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் இவர்கட்குக் கழகச் சார்பில் அரியாகரில் 28—11—55 அன்று அளித்த வரவேற்பு நிகழ்ச்சியின் வரவு-செலவு கணக்கு சரிபார்க்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டும், பொங்கல் விழாவின்போது பொதுக் கூட்டம் நடத்திச் சிறப்பாகக் கொண்டாடுவதெனவும், தோழர்கள் கி. எல்லப்பன், கந்தசாமி, டி நம்பியார் ஆகியவர்களை உறுப்பினர்களாக ஏற்றுக்கொண்டும் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

பரமக்குடி தி. மு. கழகம்

12—12—55 இரவு 10 மணியளவில் செயலாளர் டி. எம். ஆர். லிங்கன் தலைமையில், கழகப் பணிமனையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், இராமநாதபுரம், தஞ்சை, மாவட்டங்களில் புயல்—மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தும். பேராசிரியர் இருதயராஜ் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்தும், பொங்கல் விழாவை சிறப்பான முறையில் நடத்துவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கம்பம் தி. மு. கழகம்

14—12—55ல், மதுரை மாவட்டம் கம்பம் காந்திமதி நிலயத்தில், தோழர் இ. சாகுல் அமீது தலைமையில் கழகச் செயற்குழுக் கூட்டம் நடைபெற்றபோது, தஞ்சை, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்களில் புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், நிவாரணக் குழு அமைத்தும், மற்றும் பல தீர்மானங்களும் மேற்கொள்ளப்பட்டன.

தசாம்ச முறை

புதுடில்லி, டிச. 14—

புதிய தசாம்ச முறை, முதல் முதலாவதாக இந்திய இரயில்வேக்களில் கைக்கொள்ளப்படும்.

நாணயம் முதலானவற்றிலும் தசாம்சக் கொள்கையை அனுசரிப்பதென்று ஏற்கனவே இந்திய அரசாங்கம் முடிவு செய்திருக்கிறது.

நிறுவை, அளத்தல், அளவை ஆகியவை சம்பந்தமாக இக்கொள்கை இரயில்வேக்களில் நடைமுறையில் கொண்டுவரப்படும்.

பதினைந்து ஆண்டு காலத்துக்குள் இக்கொள்கையை முற்றிலும் நிறைவேற்ற இரயில்வேத் துறையினர் திட்டமிட்டுள்ளார்கள்.

இப்புதிய முறையை முற்றிலும் மாற்றியமைப்பதற்காகும் மொத்தச் செலவை இப்பொழுது கூற முடியாதுபோயினும், ஏறக்குறைய ரூ. 1 கோடி பிடிக்கும் என மதிப்பிடலாம்.

சலவைத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம்

திருச்சி, டிச 15—

11—12—55 இரவு 8 மணிக்கு மேற்படி சங்கக் குழுவின் அவசரக் கூட்டம் நடைபெற்றபோது புயல் நிவாரண நிதிக்கு சங்கச் சார்பில் நிதி திரட்டி அனுப்புவதெனவும், சங்கத் திறப்பு விழாவை விரைவில் நடத்துவதெனவும், திருச்சி நகர சபைத் தலைவர் டாக்டர் மதுரம் அவர்களுக்கும், திரு. எம். எத்திராஜுலு எம். எல். சி அவர்களுக்கும் வரவேற்பு அளிப்பதெனவும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

திராவிடத்தின் மிளகுச் செல்வம்

அமெரிக்கா அதிகமாக இறக்குமதி செய்கிறதாம்

இந்தியாவின் தென்மேற்குக் கரையில் உலகத்திலேயே சிறந்த மிளகு உற்பத்தியாகிறது அங்குள்ள மிளகுத் தோட்டங்களிலுள்ள நூற்றுக்கணக்கான மக்களுக்குப் பிழைப்பு கிடைக்கிறது. மற்ற நாடுகளைவிட அதிகமாக வாங்கும் அமெரிக்காவுக்கு இதனை ஏற்றுமதி செய்வதால், இந்தியாவின் வெளிநாட்டுச் செலாவணியிலும் அதிக இலாபம் ஏற்படுகிறது 1954—55-ல் மிளகு ஏற்றுமதியில் மட்டும் ரூ. 6,90,00,000 கிடைத்தது. அதில் அமெரிக்காவிலிருந்து மட்டும் ரூ. 4,70,00,000-க்கும் அதிகமாகக் கிடைத்தது.

இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் இந்த மிளகை அமெரிக்கர் அதிகமாய் வாங்குகின்றனர்.

1954-ல், அமெரிக்காவில் இறக்குமதியான வாசனைத் திரவியங்கள் 16 கோடி இராத்தல்; அவற்றுள் கருமிளகு 3,70,00,000 இராத்தல். அதுவே மற்றவைகளைவிட அதிகம். அதற்கு இரண்டாவதாக இறக்குமதியாகியிருப்பது கடுகு இதன் இறக்குமதி 2,20,00,000 இராத்தல்.

பழைய காலத்தில் சில சந்தர்ப்பங்களில் நாணயத்துக்குப் பதிலாக மிளகு உபயோகிக்கப்பட்டது. மிளகுக்காக இந்தியாவுக்கு வந்து சேர முயன்ற கொலம்பஸ், அமெரிக்காவைக் கண்டுபிடித்தார் என்று கூடச் சொல்லப்படுகிறது. இந்தியாவின் தென்மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில் அது அதிகமாகப் பயிர் செய்யப்பட்ட செய்தி கி. பி. 5-ம் நூற்றாண்டிலேயே கிரேக்கடலோடியவர்களுக்குத் தெரிந்திருந்தது. சுமத்திரா, சயாம், மலேயா ஆகிய இடங்களிலும் நெடுங்காலமாக மிளகு பயிர் செய்யப்பட்டது. ஆயினும், ஈரமும் நிழலும் அதிகமாயிருக்கும் இந்தியாவின் தென்மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தில்தான் உலகத்தில் உள்ள சிறந்த மிளகு எப்போதும் உற்பத்தியாகியிருக்கிறது.

இந்தியாவில் மிளகுப் பயிரில் மூன்றிலொரு பங்கு ஒரு துணைப் பயிராகப் பயிர் செய்யப்படுகிறது. பம்பாயில் வாசனைத் திரவியத் தோட்டங்களில் கமுகு, ஏலம் ஆகியவற்றோடு மிளகும் பயிர் செய்யப்படுகிறது.

மைசூரிலும், குடகிலும், சென்னையிலும் காப்பிச் செடி வளரும் இடங்களில் காப்பிச் செடிகளோடு அதுவும் வளர்கிறது. காப்பிச் செடிகளுக்கு நிழல்தரும் மரங்களில் மிளகுக் கொடிகள் படர்கின்றன. தெற்கே மலபார் மாவட்டம், திருவாங்கூர்-கொச்சி மாநிலம் ஆகியவற்றின் பொருளாதாரத்தை ஆக்குமுக்கியப் பொருளாக மிளகு விளங்குகிறது. வீட்டுக் கொல்லைகளிலும் மிளகுச் செடியை வளர்க்கிறார்கள்.

மிளகுப் பயிர் செய்வது மிகவும் எளிது மிளகுக் கொடிகளை நறுக்கி, நல்ல நிலத்தில் மழைக் காலத்தில் அவற்றை நடுகிறார்கள். நன்றாக அதற்குச் சருகு உரம் போடுகிறார்கள். அது படர்வதற்குப் பலா மரத்துக்கு இருப்பது போன்ற சொர சொரப்பான பட்டை உள்ள மரங்களைத் தெரிந்து கொள்கிறார்கள். கொடிகளை முதலில் மரத்தின் அடியில் வாழை நாரால் கட்டிவிடுகிறார்கள். அவற்றைச் சுற்றிக் களைகள் வளர விடமாட்டார்கள். உரிய காலத்தில் கொடிகள் மரத்தில் படர்கின்றன.

மூன்று வருடத்தில் அவை பலன் கொடுக்கின்றன. அவை 40 அடி உயரம் வரை வளர்வதால் பழத்தைப் பறிப்பதற்கு ஏணியை உபயோகிக்கிறார்கள். பழங்கள் சிவப்பாய் இருக்கும்போது அவற்றைப் பறிக்கிறார்கள். அதன் பின் வெயிலில் காய வைக்கிறார்கள். அவை சுருங்கிக் கருநிறமாகின்றன. அவற்றை உரித்துக் கோணிகளில் அடைத்து, கொச்சிபோன்ற துறைமுகங்களுக்கு அனுப்பி ஏற்றுமதி செய்கிறார்கள். கொச்சிக்கு அருகே மிளகு மிகுதியாக உற்பத்தியாகும் பிரதேசங்கள் இருப்பதால் கொச்சியிலிருந்துதான் மிளகு மிகுதியாக ஏற்றுமதியாகிறது.

வானவெளி யாருக்குச் சொந்தம்?

ஐ. நா. சபை ஆதிக்கத்தில் செல்லக்கூடுமா?

சட்டப் பிரச்சினை கிளம்புகிறது

நியூயார்க், டிச. 15—

இதுவரையிலும் ஒருவர்கூட வானவெளிக் கப்பலில் எந்தக் கிரகங்களுக்கும் அல்லது சந்திரனுக்கும் சென்றது கிடையாது; எனினும், ஒரு ‘செயற்கைக் கிரகம்’ ஏற்படுத்த அமெரிக்க அரசாங்கம் செய்துள்ள முடிவு, ‘வானவெளியின் சொந்தக்காரர் யார்?’ என்ற சட்ட பிரச்சினை பற்றி அமெரிக்க ராக்கெட் சங்கத்தின் பொது நிர்வாகியான ஆண்ட்ரு ஜி ஹேலி, தம்கட்சிக்காரருக்காக ஓர் அறிக்கை தயாரித்துள்ளார். வழக்கறிஞராயினும் அவர் இப்பிரச்சினையைச் சட்டப்படி அல்லாத ஒரு முறையில் அணுகியுள்ளார். ‘மனையின் சொந்தக்காரரே மனைக்கு மேல் இருக்கும் இடம் முழுமைக்கும் சொந்தக்காரர்’ என்று, வழக்கத்தில் இருந்துவரும் சட்டக் கொள்கையிலிருந்து அவர் வேறுபட்டுக் கூறுகிறார்.

தற்காலம் வானவெளி ஐ. நா.—வின் ஆதிக்கத்தில் இருந்துவர வேண்டுமென அவர் கருத்தறிவிக்கிறார். போகப்போக, பூமியில் இருக்கும் மக்கள் அனைவருடையவும் முழுச் சம்மதத்துடன், ‘வானவெளியில் ஒருவருக்கும் சொந்தரிமை கிடையாது’—என்ற நிலைமை ஏற்படுமென அவர் கூறுகிறார்.

பெல்லாரி கிளர்ச்சி

கைதானோர் விடுதலை

வழக்குகள் திரும்பப் பெறப்படுகின்றன

பெங்களூர், டிச 14—

பெல்லாரி மாவட்டத்தில், ‘பெல்லாரி, கர்நாடக மாநிலத்திலேயே இருக்கவேண்டும்—ஆந்திராவுக்கு மாற்றப்படக் கூடாது’ என்று கோரி கிளர்ச்சியிலீடுபட்ட—சிறை பிடிக்கப்பட்டுள்ள அனைவரையும் விடுதலை செய்துவிடுமாறு மைசூர் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர் என்று தெரியவருகிறது.

அவர்கள் மீதுள்ள வழக்குகளைத் திரும்பப் பெறவும் ஏற்பாடு செய்யுமாறு சர்க்கார் உத்தரவிட்டிருக்கின்றனராம்.

உத்தரவுகளின்படி கைதானோர் அனைவரும் சிறைக்கூடங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுவிட்டனர் என்றும் தெரியவருகிறது.

இரண்டு நாட்களுக்கு முன்னர் தான், ‘பெல்லாரி கிளர்ச்சி’ நிறுத்தப்பட்டது நினைவிலிருக்கலாம்.

தென்னாப்பிரிக்காவில் நிறவெறி

பாதிக்கப்படும் இந்தியர் நிலைமை

மக்கள் சபையில் பண்டித நேருவின் தகவல்

புதுடில்லி, டிச. 16—

தென் ஆப்பிரிக்க யூனியன் சர்க்காரின் கொள்கை காரணமாகவும், இன ஒதுக்கல் சட்டம் காரணமாகவும் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ள இந்திய மக்களின் எண்ணிக்கை பற்றி மக்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலமாகப் பதிலளித்த பிரதமர் நேரு பின்வருமாறு தெரிவித்தார்:—

“தென் ஆப்பிரிக்க யூனியனில் அந்த சர்க்காரின் கொள்கையாலும், இன ஒதுக்கல் சட்ட அமுலாலும் பாதிக்கப்பட்டுள்ள இந்திய மக்களின் எண்ணிக்கை பற்றித் தகவல் தெரியவில்லை. ஆனால், தென் ஆப்பிரிக்காவில் உள்ள இந்திய மக்களில் பெரும்பாலாரும் ஆசிய நிலக் கையிருப்புச் சட்டப்படி பல ஆண்டுகளாகவே பாதிக்கப்பட்டு வந்திருக்கிறார்கள். இன ஒதுக்கல் சட்டமானது இந்தியர்களை ஒதுக்கிவைக்கும் வேலை முறையைப் பூர்த்தி செய்வதற்காக உத்தேசிக்கப்பட்டது என்பதுடன், அவர்களது பொருளாதாரத்தைத் தீனறவைக்கும் நோக்கத்துடன் அவர்களை இப்போதுள்ள பிரதேசங்களிலிருந்து இடம் பெயர்த்து புதிய இடங்களுக்கு அனுப்பிவைப்பதற்காகவும் உத்தேசிக்கப்பட்டதாகும் இச்சட்டத்தின் முழு வேகமும், இனவாரிப் பிரதேசங்கள் இன்னவை என்று அறிவிக்கப்பட்ட பின்னர்தான் முழுவதுமாக உணரப்படும்; ஆயினும், ஏற்கனவே பல இந்தியர்கள் இதனால் பாதிக்கப்பட்டுவிட்டார்கள்.”

“இவை காரணமாய் சட்டத்தை எதிர்த்தவர்கள், கைது செய்யப்பட்டவர்கள், அல்லது மற்றபடி தண்டனைக்குள்ளானவர்கள், அந்நாட்டில் இன ஒதுக்கல் முறை வந்தது முதல் இந்தியாவுக்குத் திரும்பிவந்தவர்கள் ஆகிய இந்தியரின் எண்ணிக்கை என்ன?”—என்று கேட்கப்பட்ட கேள்விக்கு, ‘தகவல் தெரியவில்லை’ என்று அவர் கூறினார்.

“தென் ஆப்பிரிக்க சர்க்காரின் கொள்கைகளை எதிர்த்து நடத்தப்படும் போராட்டங்களில், இந்தியர்கள், ஐரோப்பியரல்லாத இதர இன மக்களுடன் ஒத்துழைத்து வருகிறார்களா?”—என்று கேட்கப்பட்டதற்கு, ‘ஆம்’ என்று அவர் பதில் கூறினார்.

பாக்தாத் ஒப்பந்தம்

ஜோர்டான் சேரக்கூடாதென எச்சரிக்கை

கெய்ரோ, டிச. 16—

இஸ்ரேலுக்குக் கிழக்கேயிருக்கிற ஜோர்டானை பாக்தாத் உடன்பாட்டில் பிணைத்து விடுவதற்கு ஏகாதிபத்தியம் முயற்சிப்பதாயும், அந்த வலையில் விழாமலிருக்கும்படியும், அரபுகளின் பெரியமுப்தி, ஜோர்டான் மன்னருக்கு ஒரு எச்சரிக்கை அனுப்பியிருக்கிறார்.

பாக்தாத் உடன்பாட்டில் அரபு நாடுகள் சேரக்கூடாது என்பது எகிப்து, சவூதி அரேபியா ஆகிய நாடுகளின் கொள்கை. ஜோர்டான் இன்றுவரை பிரிட்டிஷ் ஆதரவில் இயங்கிவரும் ஒரு நாடு. அங்கே பிரிட்டிஷ் இராணுவத் தலைமை தான் இன்னும் இயங்கி வருகிறது.

இன்றுதான், ஐ. நா. சபையில் ஜோர்டான் இதர 15 நாடுகளுடன் இடம் பெற்றிருக்கிறது.

* * *

ஈரான் தரும் சமாதானம்!

தெஹ்ரான், டிச. 15—

பாக்தாத் உடன்பாடு அவசியமான ஒன்று என்றும், அதைத்த ஒப்பந்தத்தை பிரதமர் நேரு கண்டித்ததற்காகத் தான் வருந்துவதாயும் ஈரான் பிரதமர் உசேன் ஆலா கூறியிருக்கிறாராம். நண்பரான நேரு. இப்படிப் பேசுவாரென அவர் எதிர்பார்க்கவில்லையாம்!

கற்பை இழக்க ஒரு பெண்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உறவு நிலவும் என்பதை எண்ணிப் பாருங்கள்.

"படேல் அவர்கள் பம்பாய் நகரில் 18 சத விகித மராத்தியர்தான் இருப்பதாகக் கூறினார்; உண்மைதான்; ஆனால், பெங்களூரில் கன்னடியர் 24 சத விகிதத்தினரும், தமிழர்கள் 31 சத விகிதத்தினரும் உள்ளனர். ஜாம்ஷெட்பூரில் 54 சதவிகிதம் மட்டும்தான் வங்காளி பேசுவோர்; ஐதராபாத்தில் 40 சத விகிதத்தினர் மட்டுமே தெலுங்கு பேசுவோர். 'பம்பாய்க்கு மட்டும் ஒரு விதி—இதர மாநிலங்களுக்கு வேறு விதி' என்று ஏன் பின்பற்ற வேண்டும்?

"இந்தியாவின் ஒற்றுமையை மனதில் கொண்டு, குழுவின் சிபாரிசுகளை மராட்டியர் ஏற்க வேண்டுமெனச் சிலர் உபதேசம் செய்துவருகிறார்கள். சுதந்திரப் போராட்டத்தில் மராட்டியரின் பங்கினை நினைத்துப்பாருங்கள். 'தீவிரத் தொண்டர்களின் உலைக்கூடம் மராட்டியம்தான்' என்று காந்தியார் தந்த நற்சாட்சிப் பத்திரத்தை நினைவுபடுத்திப்பாருங்கள்.

"எனவே, இந்தியாவின் 'ஒற்றுமை' குறித்து, மராட்டியருக்கு உபதேசம் செய்வது, சந்தனத்தை நோக்கி, 'சந்தனமே, நீ மணக்க வேண்டும்' என்று கூறுவதற்கு ஒப்பாகும். நாங்கள் போராடுவதெல்லாம் நீதிக்காக!

"இதர எல்லா இடங்களிலும், மாநில அமைப்பிற்கு மொழியை அடிப்படையாகக்கொண்ட குழுவினர், மராட்டியருக்கு மட்டும் அந்த அடிப்படையை மேற்கொள்ளாதது ஏன்? மராட்டியர் புரிந்த குற்றம்தான் என்ன?

"பம்பாய் நகரைத் தனி மாநிலமாக்குவதால் ஏற்படவிருக்கும் விளைவுகளை முதலாளிகள் எண்ணிப் பார்த்தாக வேண்டும்.

"பம்பாயில் 54,000 முதலாளிகள் இருக்கிறார்கள்; ஆனால், 11 இலட்சம் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களில் பெரும்பாலானோர் ஏழைகள்; அவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை கடந்த நவம்பர் 21-ந் தேதியன்று உணர்ந்திருந்திருக்கலாம். 'நாங்கள் சம்யுக்த மராட்டியத்திற்காக உயிரைத்தரத் தயாராயிருக்கிறோம்—சுடுங்கள்—சுட்டுத்தள்ளுங்கள்,' என்று, அவர்கள் நெஞ்சத்தைத் திறந்து காட்டியதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

"பொருளாதார ஏற்றத்தாழ்வு—'மலபார் மாளிகை ஒருபுறம்—மதுங்கா சேரிகள் ஒருபுறம்'—என்ற நிலை பிதுங்குள்ள பம்பாய் போன்ற நகரில் உள்ள மக்கள், 'அதிகாரம் எங்களிடமிருக்கிறது—இந்த அவல நிலைகளை ஒழித்துக் கட்டுவோம்'—என்று கூறமாட்டார்களா?

"ஒரு வர்க்கம்—என்ற நிலையிலிருக்கும் முதலாளிகளை ஒழிப்பது காங்கிரசின் திட்டமும் கூடத்தான்; ஆனால், காங்கிரஸ் அதனை ஒரு ஒழுங்கான, அமைதியான முறையில் செய்ய விரும்புகிறது.

"பம்பாய் நகரம் ஒரு மாநிலமாக உருவெடுக்குமானால்; முதலாளிகள் தாங்கிக்கொள்ள முடியாத அளவுக்குச் சீக்கிரமாக முதலாளிகள் ஒழிக்கப்படுவார்கள்: எனவே, பம்பாயைத் தனி மாநிலமாக்க வேண்டும் என்று கோருமுன், முதலாளிகள் ஒரு முறைக்கு இருமுறை சிந்திக்கவேண்டும்.

"மேலும், பம்பாய் நகர் தனி மாநிலமாக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக்கொண்டால், சென்னை, கல்கத்தா, கான்பூர், பெங்களூர் முதலான நகரங்களைத் தனி மாநிலமாக்கவேண்டும்—என்ற கோரிக்கை வேறு எழும்பும் என்று எச்சரிக்க விரும்புகிறேன்.

"வெள்ளைக் காகிதத்தில் கையெழுத்துப் போட்டுத் தருகிறோம்—உஜாரத்தியருக்கு என்னென்ன பாதுகாப்புகள் தேவை என்று கருதுகிறார்களோ அதை.

"எல்லாம் எழுதித்தாருங்கள்; நிச்சயம் தருகிறோம்.

"வீரம் செறிந்த சீக்கிய சமுதாயத்தினர் 40 இலட்சம் பேர்களுக்காக நீங்கள் பாதுகாப்புக்கள் தருவதாகக் கூறி, சில விஷயங்களைச் சரிப்படுத்த யத்தனித்து வருகிறீர்கள்; அப்படியிருக்கும்போது, 40 மனிதர்களுக்குப் பாதுகாப்பு தருவது போதுமானதல்லவா? இந்த 40 மனிதர்கள்தானே, பம்பாய் நகர மக்களின் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள்?

"இத்தனை எச்சரிக்கைகளுக்கும் பிறகு நீங்கள் பம்பாயைத் தலைநகராகக்கொண்ட சம்யுக்த மராட்டியம் அமைக்க இணங்காவிட்டால், மண்ணுக்குரிய மக்களைப் பற்றி நீங்கள் கவலைப்படவில்லை — சொத்துடையரின் நலனைப்பற்றித்தான் கவலைப்படுகிறீர்கள் என்று பொருள்படும்.

"காரண காரியங்களுக்குக் கட்டுப்படாவிட்டால் அப்போதே ஜனநாயகம் மறைந்துவிடும். நீங்கள் மராட்டியரின் குரல்வளையை நெறித்துவிடலாம்—அடக்குமுறையால்! ஆனால், நீண்ட நாளைக்கு இந்த நிலை நீடிக்காது.

"மராட்டியர்கள் நண்பர்களாயிருப்பதற்கு மிகவும் சிறந்தவர்கள்; ஆனால், தங்களுக்கு அநீதி இழைக்கப்பட்டதைத் தெரிந்துகொண்டுவிட்டால், அந்த அநீதியை அழிக்காமல், நீதியை நிலைநாட்டாமல் விடமாட்டார்கள். எங்கள் மக்களை அந்த நிலைக்குத் துரத்தாதீர்கள்!"

கழகக் கூட்டம்

★

கடமங்குடி

21—12—55 மாலை 5 மணிக்கு

தலைவர்: கு. ஆனைமுத்து

பேசுவோர்:

அருண்மொழி

பொ. தருமன்

ம. கோ. மணி

சென்னை மாவட்ட தி. மு. கழகக் கிளைச் செயலாளர்கட்கு

★

"கடந்த 11-ந் தேதி நடந்த மாவட்டச் செயற்குழுவில் செய்த முடிவுப்படி, புயல் நிவாரண நிதியில் ஈடுபட்டிருக்கும் கிளைக் கழகங்கள் இம்மாத 20-ந் தேதிக்குள், வசூலித்த பணம், பண்டம், துணிமணி ஆகியவைகளை உடனடியாக மாவட்டக் கழகத்தில் கொண்டுவந்து சேர்க்கும்படிக் கேட்டுக்கொள்கிறேன்.

"திராவிடர் திருநாளுக்காக ஒவ்வொரு கிளைக் கழகமும் செலுத்தவேண்டிய பங்கீட்டுத் தொகையான ரூ. 5-ம் இம்மாத இறுதிக்குள் தவறாமல் மாவட்டக்கழகத்தில் செலுத்திவிடும்படி. கேட்டுக்கொள்கிறேன்,"

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

சேதமுற்ற இராமநாதபுரம் - மாவட்டத்தில் பொதுச்செயலாளர்

முதல் அமைச்சர் மீண்டும் பார்வையிடுகிறார்

கலையுலக நண்பர்கள் காணிக்கை

சென்னை, டிச. 19—

திருச்சி, இராமநாதபுரம் மாவட்டங்களில் புயல்—வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதன் மந்திரி காமராசர் கடந்த இருநாட்களாகச் சுற்றிப்பார்த்திருக்கிறார்.

திருச்சி மாவட்டத்தில் ஆலங்குடி, திருமயம் வட்டங்களில் சேதமுற்ற பகுதிகளை அவர் பார்வையிட்டார். நிவாரண வேலைகளைச் செய்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகளும் அவருடனிருந்திருக்கின்றனர்.

பின்னர் அவர், இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை வட்டத்திற்குச் சென்று அங்கு வெள்ளத்தில் மூழ்கிவிட்ட பகுதிகளையும், அவதியுற்ற மக்களையும் கண்டிருக்கிறார். இந்தப் பகுதிகளில், வேதாரண்யம் போன்ற தஞ்சைப் பகுதியில் ஏற்பட்ட அளவு சேதாரம் இல்லை என்றாலும், பயிர்பச்சைகள் எல்லாம் வெள்ளத்தால் நாசமுற்றதையும், வீடுகள் எண்ணற்றவை இடிந்து தரைமட்டமானதையும் கண்ட காமராசர், நிவாரணத்திற்கான எல்லா வேலைகளையும் மேற்கொள்ளுமாறு அதிகாரிகளிடம் கூறியதாகத் தெரிகிறது.

பழுதுபட்ட சாலைகளைச் செப்பனிடுவதற்கு மாவட்டக் கழகத்தாருக்குக் கடன் வழங்குவது பற்றி சர்க்கார் யோசித்துவருவதாயும் தெரியவருகிறது.

புயல்—வெள்ளத்திற்குப் பிறகு (அதாவது சுமார் 15 நாட்களுக்குப் பிறகு) முதன் முதலாக கடந்த சனிக்கிழமையன்றுதான் சென்னைக்கும் — தனுஷ்கோடிக்கும் இடையே நேர்வழி இரயில் போக்குவரத்துத் துவங்கியிருக்கிறது.

சத்திரக்குடிக்கும்—இராமநாதபுரத்திற்குமிடையே இரயில் பாதைக்கு ஏற்பட்ட பெருத்த சேதாரங்கள் இப்போது சரி செய்யப்பட்டுவிட்டது.

நிவாரணத்திற்காக, தமிழகத்தின் பல பகுதிகளிலும் பொதுமக்கள் தங்களாலான உதவிகளைத் திரட்டி அளித்தவண்ணமுள்ளனர்.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட திருப்புத்தூர், சிவகங்கை பகுதிகளைச் சுற்றிப் பார்த்திருக்கிறார். ஆங்காங்குள்ள கழகத் தோழர்கள் நிவாரண வேலைகளில் ஈடுபட்டிருப்பதையும் கண்டுவிட்டு, மேலும் அவர்கள் ஊக்கமுடன் பணியாற்றும் வழிவகைகளைக் கூறியிருக்கிறார்.

சென்னையில் கலையுலக நண்பர்கள், தாங்கள் திரட்டிய நிவாரண நிதியில் முதல் பகுதியை அமைச்சர் சுப்பிரமணியத்தை அழைத்து, வாணி மகாலில் கூட்டம் ஒன்று கூட்டி, அளித்திருக்கின்றனர். ரூ 41,000 அவரிடம் தரப்பட்டிருக்கிறது.

மேலும் பல வட்டங்களிலும் நிவாரண நிதி வசூல் ஜரூராக நடைபெறுகிறது.

சென்னைக்கு புதிய ஷெரீப்

ஆங்கிலேயர் நியமனம்

சென்னை, டிச. 19—

சென்னை பின்னி அண்டு கம்பெனியின் 'சீனியர் டைரக்டரா'ன ஆர். இ. காஸ்டெல் என்ற ஆங்கிலேயர், 1956-ம் ஆண்டிற்குச் சென்னை ஷெரீபாகச் சென்னை சர்க்காரால் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் பிரிட்டனைச் சேர்ந்த பகுதியான மாஞ்செஸ்டரில் பிறந்தார்.

ஒருமுறை, ஒரு மனிதனைக் கடிக்கும்பொழுது நாகப் பாம்பு ஒன்பது பேரைக் கொல்லக்கூடிய நஞ்சைக் கக்குகிறது.

புயல், வெள்ள நிவாரண நிதிக்காக

எம். ஜி. ஆர். நாடக மன்றத்தாரின் உதவி நாடகம்

காட்பாடி கிராமக்கண்காட்சி திடலில் உள்ள

திறந்த வெளி அரங்கில்

20—12—1955 செவ்வாய் இரவு 10 மணிக்கு

சி. என். அண்ணுதுரை

அவர்கள் தலைமையில்

புரட்சி நடிகர் **எம். ஜி. இராமச்சந்திரன்**

மற்றும் எம். ஜி. ஆர். நாடக மன்றத்தினர் நடிக்கும்

'ஆசை நினைவு'

(புதிய நாடகம்)

கட்டணம்: ரூ. 3, 2, 1, அணு 8; பெண்கள்: தரை அணு 6

செயலாளர்கள்: டி. வி. வேணுமூர்த்தி & எம். எஸ். பாபு

வேலூர் சாமி பிக்சர்ஸ், கிருஷ்ணா லாட்ஜில் டிக்கட்டுகள் கிடைக்கும்

பாக்தாத் ஒப்பந்தத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

40 பேர்கள் கொல்லப்பட்டனர்; 300 பேர்கள் கைது!

ஜோர்டான் முழுவதும் நெருக்கடி நிலை பிரகடனம்

டமாஸ்கஸ், டிச. 17—

பாக்தாத் இராணுவ ஒப்பந்தத்தில் ஜோர்டானை இணைப்பதற்குப் புதிய சர்க்கார் மேற்கொண்டுள்ள முயற்சிகளை எதிர்த்து பல்லாயிரக்கணக்கான மக்கள் நாடெங்கிலும் கிளர்ந்தெழுந்து பெரிய ஆர்ப்பாட்டங்கள் நடத்தியிருக்கின்றனர்.

ஆர்ப்பாட்டங்களின்போது, இராணுவத்தினர் 40 பேர்களைக் கொன்றதாகவும் செய்தி தரப்படுகிறது.

நாடு முழுவதிலும் இப்போது 'அவசர நிலை' பிரகடனம் செய்யப்பட்டிருக்கிறதாம்.

இராணுவத்தினரில் 40 பேர்களும், ஆர்ப்பாட்டம் செய்தோரில் 200 பேர்கள் வரையில் படுகாயமுற்றதாகவும் வேறோர் செய்தி கூறுகிறது.

300 ஆர்ப்பாட்டக்காரர்கள்வரை கைது செய்யப்பட்டிருப்பதாயும், அவர்களில் இருவர் மக்கள் சபை உறுப்பினர்கள் என்றும் கூறப்படுகிறது.

ஜோர்டான் நகரங்களில் மீண்டும் நிலையை கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர இராணுவத்தினர் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனராம்.

இராணுவத்தினர், சில நகரங்களில், ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது பலமுறை துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாயும் கூறப்படுகிறது.

புதிய பிரதமரான ஹஜ்ஜா மகாலியின் உறவினரும், இராணுவத் தளபதியுமான மேஜர் மகாலியும் படுகாயமுற்றாராம்.

சையத் எல் மப்தியின் தலைமையிலிருந்த மந்திரி சபையில் இடம் பெற்றிருந்த நயீம் அப்துல் ஹாதி சுலேமான் தௌகான் என்ற இருவருங்கூட, ஜோர்டான், பாக்தாத் இராணுவ ஒப்பந்தத்தில் இணையக் கூடாதெனக் கோரி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்பதுடன் மஹாலி சர்க்கார் ஒழிய வேண்டும் என்றும் கோரினராம்.

★

கலவரத்திற்கு காரணம்

ஜோர்டான் சுதந்திர நாடு; ஆனால், பிரிட்டிஷ் இராணுவப் பாதுகாப்பில் அது இருந்து வருகிறது.

பிரிட்டிஷ் தலைமை சேனாதிபதி ஜெனரல் டெம்ளர், பாக்தாத் திட்டத்தில் ஜோர்டானை இணைக்கும் திட்டத்துடன் அங்கு சென்றார். அதனை ஏற்கமறுத்து, சையீத் எல் முப்தியின் மந்திரி சபை கலைந்து புதனன்று இராஜிநாமா செய்துவிட்டது பின்னர், ஒப்பந்தத்துக்குச் சாதகமான மந்திரி சபை அமைக்கப்பட்டது. எதை எதிர்த்துத்தான் ஆர்ப்பாட்டங்களை நடைபெற்றது. ஜோர்டான் மன்னர் 20-வது வயது நிரம்பிய இளையராகும்.

ஈரானுடன் வர்த்தகத் தொடர்பு!

புதுப்பிக்க ரஷ்யா முயற்சி

தெஹ்ரான், டிச. 18—

பாக்தாத் ஒப்பந்தத்திற்கு தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் சோவியத் ரஷ்யா முன்பு ஈரானுடன் வர்த்தக சம்மந்தமான பேச்சுவார்த்தைகள் நடத்துவதை நிறுத்தியது. தற்போது மீண்டும் அது குறித்து பேச்சுவார்த்தைகளைத் துவங்க ரஷ்யா ஈரானை அழைத்திருக்கிறதாம். இந்த முயற்சி அரசியல் வட்டாரங்களில் ஆச்சரியத்தை அளித்திருக்கிறதாம்.

ஈரான் மக்கள் சபை உறுப்பினர் தூதுக் குழு ஒன்றை ரஷ்யாவிற்கு அனுப்பும்படி விடுத்திருந்த அழைப்பை முன்பு ரஷ்யா ரத்து செய்தது; இப்போது அந்த அழைப்பையும் புதுப்பித்திருக்கிறதாம்.

★

ஜோர்டான்-பிரிட்டன் பேச்சுகள் நிறுத்தம்

லண்டன், டிச. 17—

ஜோர்டானை பாக்தாத் இராணுவ ஒப்பந்தத்தில் சேர்க்கும் பொருட்டு பிரிட்டனுடன் நடத்தப்பட்டு வந்த பேச்சுவார்த்தைகள் கலைக்கப்பட்டுவிட்டதாயும், ஆனால் அந்தப் பேச்சுவார்த்தைகள் பின்னர் தகுந்த சமயத்தில் துவக்கப்பெறும் என்றும் ஜோர்டான் பிரதமரான ஹஜார் மஹா அலி தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ